ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை –

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள நடவடிக்கை தேவை!

மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கோரிக்கை!

புதுடெல்லி, ஆக. 7- ஆறுகள், நிலத்தடி நீர்த் தேக்கங்கள் சதுப்புநிலங்கள் உள்ளிட்ட அனைத்து நீர்வளங்களையும் ஒன்றோடொன்று தொடர்புடைய சுற்றுச்சூழல் அமைப்புகளாகக் கருதி ஒருங்கிணைந்த முறையில் நிர்வகிக்கும் அவசியம், நீர் வளப் பகிர்வில் நிலவும் சட்ட, நிர்வாக மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான சவால்கள், அறிவியல் அடிப்படையிலான நீர்வள திட்டமிடல், தரவுப் பகிர்வு, நிகழ்நேர கண்காணிப்பு, மக்கள் பங்கேற்பு மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் நீண்டகால நீர் மேலாண்மை உத்திகள் குறித்து ஒன்றிய அரசின் நிலைப்பாட்டை விளக்குமாறு வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேட்டிருந்தார்.

இதற்கு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகத்தின் இணை அமைச்சர் ராஜ் பூஷண் சௌத்ரி பதிலளிக்கையில், ஒன்றிய அரசு ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மைக்கு முக்கியத்துவம் அளித்து வருவதாக தெரிவித்தார். தேசிய நீர்க் கொள்கை - 2012 (National Water Policy 2012) ஆற்றுப்படுகை அடிப்படையிலான திட்டமிடல் மற்றும் Integrated Water Resources Management (IWRM) கொள்கைகளை வலியுறுத்துவதாகவும், நீர் வளங்களை நிலையான, சமமான மற்றும் திறமையான முறையில் பயன்படுத்துவதே அரசின் நோக்கமாக இருப்பதாகவும் கூறினார்.

மேலும், இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணை, மாநிலப் பட்டியல் (Entry 17) படி நீர் என்பது மாநில அரசுகளின் பொறுப்பாக இருந்தாலும், பல்வேறு நிறுவனங்களின் அதிகாரப்

பிரிவு, மாநிலங்களின் நீர்ச் சட்டங்களில் உள்ள வேறுபாடுகள், மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தகராறுகள், நீர் சேமிப்பு மற்றும் விநியோக உள்கட்டமைப்பு பற்றாக்குறை, நகரமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கல் காரணமாக அதிகரித்து வரும் நீர் தேவை போன்ற சவால்களை ஒன்றிய அரசு பல்வேறு திட்டங்கள், நிதி உதவிகள் மற்றும் நிறுவன அமைப்புகள் மூலம் எதிர்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

அறிவியல் அடிப்படையிலான நீர்வள மேலாண்மைக்காக National Water Informatics Centre (NWIC) உருவாக்கப்பட்டு, IndiaWRIS மற்றும் Water Information Management System (WIMS) மூலம் ஒருங்கிணைந்த தரவுப் பகிர்வு மற்றும் நிகழ்நேர தகவல் சேகரிப்பு மேற்கொள்ளப்படுவதாகவும், நாடு முழுவதும் சுமார் 39,000 RealTime Data Acquisition System (RTDAS) நிலையங்கள் செயல்பட்டு வருவதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

மக்கள் பங்கேற்பை உறுதி செய்யும் வகையில், இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் (IIT), தேசிய தொழில்நுட்பக் கழகங்கள் (NIT), இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR), அரசு சாரா அமைப்புகள் (NGO), குடிமக்கள் அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் Water User Associations (WUA) ஆகியவற்றுடன் இணைந்து செயல்பட அரசு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும், ஜல் ஜீவன் மிஷன், அடல் புஜல் யோஜனா, ஜல் சக்தி அபியான் - Catch the Rain உள்ளிட்ட திட்டங்கள் மூலம் மழைநீர் சேகரிப்பு, நீர் பாதுகாப்பு மற்றும் நீர் பயன்பாட்டு திறன் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாதுகாப்பான குடிநீர் அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்வது, மழைநீர் சேகரிப்பை விரிவுபடுத்துவது, பாரம்பரிய நீர்நிலைகளை மீட்டெடுப்பது, நீர் மறுசுழற்சி, நுண்ணீர்ப்பாசனம், நிலத்தடி நீர் மேலாண்மை மற்றும் அறிவியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் கொண்ட, உள்ளடக்கிய மற்றும் நிலையான நீர் நிர்வாகத்தை உருவாக்குவதே மத்திய அரசின் நீண்டகால நோக்கமாகும் என அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழகத்திற்காகச் சிறை சென்று வந்த விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயனை நேரில் அழைத்துப் பேசினார்.

ஒன்றுக்கும் உதவாத -

மாற்றுத்திறனாளிகளையும் மோசம் செய்த வெற்று த.வெ.க. பட்ஜெட்!

தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் அறிக்கை!

சென்னை, ஆக. 7 - கழக மாற்றுத் திறனாளிகள் அணி செயலாளர் பேரா.தீபக்நாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: முழுக்க முழுக்க மோசடியால் நடந்து முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் வெகு மக்களுக்கு பல பொய்யான வாக்குறுதிகளை தந்தது ஏமாற்றியது போல் மாற்றுத்திறனாளிகளுக்கும் பளபளப்பாய் பல பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி சோபா விற்று ஆட்சிக்கு வந்த முதலமைச்சர் விஜய் தாக்கல் செய்திருக்கும் பட்ஜெட்டில் அவர் தந்த வாக்குறுதிகள் குறித்த எந்த அறிவிப்பும் செய்யப்படாதது உண்மையில் மாற்றுத்திறனாளி சமூகத்திற்கு பெருத்த ஏமாற்றத்தை தந்திருக்கிறது.

திராவிட மாடல் அரசில் மாற்றுத்திறனாளிகள்:

கடந்த 2021-ல் திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் மாற்றுத்திறனாளிகள் மாதாந்திர உதவித் தொகையை 1500 ரூபாயாக உயர்த்தி தருவ

தாக சொல்லிய கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021 ஆட்சி அமைந்த உடன் வாக்குறுதிபடி ஆயிரம் ரூபாய் உதவித்தொகை பெற்று வந்த மாற்றுத்திறனாளிகளுக்கு 1500 ரூபாயும் 1500 ரூபாய் பெற்று வந்த கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 2000 ஆக உதவித்தொகை உயர்த்தி வழங்கினார். அதேபோல் கடந்த 2026 சட்டமன்ற தேர்தல் வாக்குறுதியில் மாதாந்திர உதவித் தொகை 1500 இல் இருந்து 2500 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருந்தது ஒரு வேளை மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைந்திருந்தால் சொன்னபடி மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை இந்நேரம் உயர்த்தி வழங்கப்பட்டிருக்கும் என்பதற்கு 2021 வாக்குறுதி நிறைவேற்றமே சான்று.

ரூபாய் 1472 கோடி ஒதுக்கிய திராவிட மாடல் அரசு:

மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டிற்கு ஒட்டு மொத்த இந்தியாவிற்கு ஒன்றிய அரசு ஒதுக்கிய நிதி 1400 கோடி ரூபாயாக இருக்க திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டிற்கு அதிகப்படியான நிதி ஒதுக்கீடாய் ஒட்டுமொத்த இந்தியாவிற்கான நிதி ஒதுக்கீட்டை விட 72 கோடி கூடுதலாக ரூபாய் 1472 ஒதுக்கப்பட்டு மாற்றுத்திறனாளிகள் வாழ்வு வளம் பெற முன் எப்போதும் இல்லாதபடி பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டன அதன் விளைவாக பள்ளி கல்லூரி பயிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கட்டண சலுகை, பொறியியல் மற்றும் மருத்துவ ம் பயிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு கட்டணத்தில் இருந்து விலக்கு, தொழிற்பயிற்சி, சுய தொழில் தொடங்க நிதி உதவி, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் வீடு ஒதுக்கீடு, சர்வதேச தரத்திலான உதவி உபகரணங்கள் மேம்படுத்தப்பட்ட சக்கரம் பொருத்திய பெட்ரோல் ஸ்கூட்டர்கள் ஒரு லட்சம் ரூபாய்க்கும் அதிகமான விலை கொண்ட ஸ்டேரிங் பொருத்தப்பட்ட தானியங்கி சக்கர நாற்காலிகள், காப்பீட்டு திட்டங்கள், திருமண உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகள் குழந்தைகளின் படிப்புக்கான உதவித்தொகை என இன்னும் என்னிலடங்க நலத்திட்டங்களை மாநில முழுவதும் இருக்கும் மாற்றுத்திறனாளிகள் பல்வேறு அரசு உதவிகளைப் பெற்று பயனடைந்தனர்.

மாற்றுத்திறனாளிகளை ஏமாற்றிய விஜய் அரசு:

மாற்றுத் திறனாளிகள் வாழ்க்கையைப் பற்றி எவ்வித புரிதலும் இல்லாமல் ஆட்சிக்கு வந்தால் மாதாந்திர உதவித்தொகை 3000 உயர்த்தி வழங்கப்படும் என வாக்குறுதி அளித்த விஜய் அவர்களின் தவெக இன்று ஆட்சிக்கு வந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்ஜெட்டில் அது பற்றி எந்தவித அறிவிப்பும் இல்லாமல் கடந்து சென்றிருப்பது த.வெ.க. வின் ஏமாற்று வேலையை வெட்ட வெளிச்சப் படுத்தி காட்டுகிறது உதவித் தொகை உயர்த்தி வழங்கப் படும் என்று காத்திருந்த மாற்றுத்திறனாளிகள் உள்ளங்களில் இருளை ஏற்படுத்தி இருக்கிறது.

பொய் பரப்பிய விஜய் அரசு:

உண்மையில் எதுவுமே செய்யாமல் விஜய் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகையை உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ளார் என்று பொய் சுனாமி மூலம் இந்த மாநிலத்தையே சுருட்டி வாரி இன்று இருளில் தள்ளிய ரூட் மாபியா மூலம் பொய் செய்தி கசிய விடப்பட்டு விஜய் அவர்களுக்கு போலி பிம்பம் உருவாக்கும் வேலையை சில கூலிக்கு மாரடிக்கும் அமைப்புகளை கொண்டு நடத்தப்பட்டது ஆனால் இன்று அத்தனையும் பொய் என்று இந்த பட்ஜெட் பல் இளித்து நிற்கிறது.

இந்த அரசு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியல் மற்றும் உரிமை சார்ந்த பார்வை இல்லாமல் கழிவிறக்க பார்வையோடு செயல்படுகிறது என்பதற்கு இது மேலும் உறுதியான சான்றாகும். எனவே இது போல் தங்கள் புத்திக்கு எட்டாத வேலைகளை செய்து மாற்றுத்திறனாளிகளை பாதிப்புக்கு உள்ளாக்குவதை விடுத்து அறிவந்தவர்களின் ஆலோசனையை பெற்று ஆக்கபூர்வமான திட்டங்களை தீட்ட வேண்டும். மேலும் வெகு மக்களை ஏமாற்றுவது போல் விளிம்பு நிலை மாற்றுத் திறனாளி களையும் ஏமாற்ற நினைக்காமல் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்தபடி மாற்றுத் திறனாளிகள் மாதாந்திர உதவித் தொகையை 3000 ஆக உயர்த்தி உடனே அறிவித்திடவும் இன்று அறிவிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கை இல்லம் திட்டத்தை உடனே கைவிட வேண்டும் என்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாற்றுத் திறனாளிகள் அணி வலியுறுத்துகிறது.

எதுவுமே செய்யாத த.வெ.க. அரசு:

மொத்தத்தில் நேற்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கும் பட்ஜெட் என்பது மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் துளி அளவு கூட மாற்றத்தை நலனை கருத்தில் கொள்ளாமல் அறிவிக்கப்பட்டு இருக்கும் வெற்று பட்ஜெட் என்பதையும் மாற்றுத்திறனாளிகளுக்கென எதையுமே செய்யாமல் பெரிதாய் எதையோ செய்து விட்டது போல பொய் பிம்பத்தை காட்ட முற்பட்டிருக்கும் வெற்று வேட்டு என்பதை திராவிட முன்னேற்ற கழக மாற்றுத்திறனாளர் அணி இந்த அரசின் போலித்தனத்தை சமூகத்திற்கு தோலுரித்துக் காட்டும் என்பதையும் இந்த ஒன்றுக்கும் உதவ பட்ஜெட்டிற்கு தனது கடுமையான கண்டனத்தை இங்கே பதிவு செய்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பால் உற்பத்தி உள்பட

பால்வள மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் யாவை?

மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக. 7 - பால்உற்பத்தி உள்ளிட்ட பால்வள மேம்பாட்டிற்கு ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

இது குறித்த அவரது கேள்விகள் வருமாறு:-

ராஷ்டிரிய கோகுல் மிஷனின் கீழ் தமிழ்நாட்டில் நாட்டுப்புற கால்நடை பாதுகாப்பு, மரபணு மேம்பாடு, அதிக பால் உற்பத்தி மற்றும் நிலையான பால்வள மேம்பாட்டை ஊக்குவிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ராஷ்டிரிய கோகுல் மிஷன் (RGM) திட்டத்தை அரசு செயல்படுத்தியுள்ளதா, அவ்வாறு எனில், ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களின் விவரங்கள் மற்றும்

அவற்றின் தற்போதைய நிலை என்ன?

தமிழ்நாட்டிற்கு இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் மற்றும் வழங்கப்பட்ட உதவிகளின் கூறுகள் வாரியான (component-wise) விவரங்கள்;

தமிழ்நாட்டில் நாட்டுப்புற இன மேம்பாடு, செயற்கை முறை கருவூட்டல், கரு மாற்று தொழில்நுட்பம் (embryo transfer technology), விந்து சேகரிப்பு நிலையங்கள் (semen stations), கோகுல் கிராமங்கள், இன் விட்ரோ கருத்தரித்தல் (IVF) வசதிகள் மற்றும் பிற கால்நடை இனப்பெருக்க உள்கட்டமைப்புகளுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளதா, அவ்வாறு எனில், அதுகுறித்த விவரங்கள்;

தமிழ்நாட்டில் கோகுல் கிராமங்கள், விந்து சேகரிப்பு நிலையங்கள், IVF ஆய்வகங்கள் மற்றும் இனப் பெருக்கப் பண்ணைகள் உள்ளிட்ட கால்நடை இனப்பெருக்க உள்கட்டமைப்புகளை மேலும் வலுப்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா, அவ்வாறு எனில், அதுகுறித்த விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

இதற்கு மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் என்கிற லாலன் சிங் விரிவாக பதிலளித்துள்ளார்.

அது வருமாறு:-

நாட்டுப்புற இனங்களின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு, கால்நடை எண்ணிக்கையின் மரபணு மேம்பாடு மற்றும் பால் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக ராஷ்டிரிய கோகுல் மிஷன் (RGM) செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு ரூ. 12,521.83 லட்சம் மத்திய உதவி விடுவிக்கப்பட்டு, அது மாநில அரசால் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத்தில் RGM திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியுதவியின் கூறுகள் வாரியான விவரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில், மாநிலத்தில் பால்வள உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கும் வலுப்படுத்துவதற்கும் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (NPDD) கீழ் தமிழ்நாட்டில் ரூ. 9,525.07 லட்சம் விடுவிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது என்று பதில் கூறினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எலமந்தா
ஆகஸ்ட் 7 (1995)

தி.மு.கழக ஆதிதிராவிட நலப் பிரிவு மாநில செயலாளராகவும், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

எப்பொழுதும் ஓடியாடி ஏதாவது கழகப் பணி, பொதுப்பணி மற்றும் ஆதிஆந்திர மக்களுக்கான பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நிகரற்று விளங்கியவர்.

"தொண்டனாக அலைந்தவர். தொழில் மேற்கொண்டு சிறந்தவர். என் விருப்பம் நிறைவேற்றிட எம்.எல்.சியாகப் பொறுப்பேற்று மேலவையில் கருத்து முழக்கம் செய்தவர். கழகத்தை உயிராக எண்ணியவர்!" என தலைவர் கலைஞர் அவர்களால் 'வீரவேங்கையொன்று வீழ்ந்ததே!' என இரங்கல் கடிதத்தில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஹைவேவிஸ் எம். மனோகரன்
ஆகஸ்ட் 7 (2017)



இளவயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்த மலைப் பிரதேசமான ஹைவேவிஸ் பேரூர்க் கழகச் செயலாளராகவும் – இருபத்தெட்டு ஆண்டுகள் ஒன்றுபட்ட மதுரை மாவட்ட தோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.